# கவிதை பாடுவேன்

போதகர். எ.கே. அனிபா
அன்பின் குரல்
சென்னை - 600 099.
✆ : 5500637

கற்றவனல்ல நான்
கவிதைகள் வடிப்பதற்கு
கர்த்தரின் கிருபையால்
கவிதைகள் நினைவில்வர
காகிதம் கரத்தில்வர
கவிதைகள் எழுதிவிட்டேன்
மகிமை கர்த்தருக்கே
மண்ணான எனக்கல்ல
எங்கோ நானிருந்தேன்
எம்பெருமான் தேடிவந்தார்
என்னை மீட்டெடுத்தார்
என்பணியை செய்திடென்றார்
அவர்பணி நான்செய்ய
அருகதை எனக்கில்லை
ஆயினும் அவர்பணிக்காய்
அர்ப்பணித்தே னவர்கரத்தில்
அன்புடன் வேண்டுகிறேன்
அவர்பணி நான்தொடர
அனுதினம் ஜெபித்திடுவீர்
அனைவருக்கும் வாழ்த்துக்கள்

**அன்பரின் பணியில்**

**A.K.H**

NBIN URAL ANIFA

# என் சாட்சிக்கவிதை

(தானியேல் 4 : 2)

| | | | |
|---|---|---|---|
| மூவெட்டு | வருடமுன்னே | முகமதியனாய் | பிறந்தேன் |
| ஓரெட்டு | வருடத்தில் | அன்னையவள் | கண்ணயர |
| ஈரெட்டு | வருடங்கள் | இல்லத்தில் | இருந்தங்கு |
| சீர்கெட்டுப் | போனபின் | சென்னைக்கு | நான்சென்றேன் |
| பின்னெட்டு | வருடங்கள் | உலகின்பல | பாவங்களும் |
| ஒன்றாக | எனையழுத்த | ஓடினேன் | அமைதிதேடி |
| திக்கெட்டும் | தேடினேன்நான் | தேற்றுவார் | உண்டோவென |
| இக்கட்டில் | நானிருந்தேன் | இறைவனையோ | தேடவில்லை |
| கற்றநல் | வேதத்துடன் | கைகொண்ட | தொழுகைமுறை |
| உற்றநல் | நண்பருடன் | ஊராரின் | ஆலோசனை |
| சற்றே | எனைமாற்ற | சளைக்காமல் | ஓதினாலும் |
| சடுதியில் | நான்மாற | சாத்தானோ | விடவில்லை |
| என்பாவ | பாரத்தால் | என்னுடலில் | பந்நோய்கள் |
| எதிர்கால | வாழ்வெல்லாம் | இருள்மயமாய் | தோன்றிட்வே |
| இனியுண்டா | வாழ்வென்று | ஏங்கிநான் | நின்றபோது |
| **என்மகனே** | என்றழைத்தார் | எம்பெருமான் | இயேசுபிரான் |
| கூப்பிட்ட | குரல்கேட்டு | கூர்ந்துநான் | பார்த்தபோது |
| கொட்டும் | குருதியுடன் | கோரச் | சிலுவையின்மேல் |
| குற்றுயிராய் | நின்றவரும் | கிட்டவா | என்றழைக்க |
| தட்டாமல் | சென்றுதாள் | பணிந்தேனென் | பாவந்தீர |
| பணிந்த | என்சிரசில் | பரமன்கை | வைத்தபோது |
| செங்குருதி | என்சிரசில் | சிந்தினதை | நானுணர்ந்தேன் |
| அங்கங்கள் | ஒன்றொன்றாய் | அந்நேர | மேகழுவ |
| அப்பப்பா | அவ்வுணர்வு | எப்படித்தான் | நானுரைப்பேன்!!! |

# வேதம் ஒரு தெளி தேன்

(எசேக்கியல் 3 : 4)

வேதப்புத்தகம் ஒன்றைப் பார்த்தேன்
விரைவாக கரத்திலதை எடுத்தேன்
வேகமாய் புத்தகத்தை திறந்தேன்
வாஞ்சையுடன் நானதைப் படித்தேன்
எப்பொழுதும் வேதத்தை நேசித்தேன்
வசனத்தின் நடைகண்டு ரசித்தேன்
வேதத்தின் போதனையால் மலைத்தேன்
காரணம் வேதம்கன் மலைத்தேன்
எனக்கிது ஏற்றதென்று நினைத்தேன்
எந்நாளும் வேதத்தில் நிலைத்தேன்
பசிகண்ட போதெல்லாம் புசித்தேன்
பாங்காக அணுஅணுவாய் ருசித்தேன்
வித்தான வசனத்தை எடுத்தேன்
வீதியெல்லாம் விரைவாக விதைத்தேன்
ஜெபமெனும் தண்ணீரை தெளித்தேன்
விளைந்த மணிகளை அறுத்தேன்
விரைவாக களஞ்சியத்தில் சேர்த்தேன்
சேர்ந்த பலன்கண்டு மகிழ்ந்தேன்
இத்தனைத்தேன் எங்கிருந்து எடுத்தேன்
தெளிதேனாம் வேதத்தில் தானெடுத்தேன்

# காலடிகள்
(யோசுவா 1 : 9)

கனவொன்று கண்டேன் அதில்
கர்த்தர் தோன்றினார்
கடந்து வந்த பாதைதனை
காண வேண்டுமோ என்றார்
ஆம் என்றேன் நான்
அழைத்துச் சென்றார் அணைத்தபடி
அத்தனை பாதையிலும்
அடுக்கடுக்காய் பாதடிகள்
இரண்டிரண்டாய் இருக்கக் கண்டேன்
இது எனக்கு விளங்கவில்லை
கண்களில் கேள்விக் குறியுடன்
கர்த்தரை நோக்கினேன் நான்
கருத்தை புரிந்துக் கொண்டார்
கனிவுடன் என்னைக் கேட்டார்
நான் மட்டும் நடந்த பாதையில்
நான்கு காலடியா?
இரண்டடிகள் எனதறிவேன்
இன்னும் இரண்டடிகள் இங்கெப்படி?
என்று தானே கேட்க நினைத்தாய்?
என்று கேட்டார் என்னைப் பார்த்து
ஆம் என்று சொல்லாமல்
ஆமோதித்து தலையசைத்தேன்
என்றும் நான் உன்னோடென்று
அன்றே நான் சொன்னேனே
நீ நடந்த இடமெல்லாம்
நிழல்போல் நான் வந்தேன்

அதனால் தான் அருகில் உள்ளது
என் பாத படிகள் என்றார்.
ஆனந்த மடைந்தபடி
அடுத்த பாதைக்கு சென்றோம் - அது
கால் வைக்க முடியாத
கல்லும் முள்ளும் நிறைந்த பாதை
அதில் மட்டும் காலடிகள்
இரண்டு மட்டும் இருக்கக் கண்டேன்
இதுவரை உடனிருந்தவர்
இங்கு என்னை விட்டுவிட்டார்
நான் மட்டும் நடந்த பாதையில்
காண்பதென் காலடியா?
கண்மூடி சிந்தித்தேன்
கனிவுடன் எடுத்துச் சொன்னார்
கல்லும் முள்ளும் நிறைந்த இந்த
கடின வழி நான் நடக்க
கடுகளவும் முடியாதென்று
கால் கடுத்து நின்று விட்டாய் - உன்னை
கரங்களில் தூக்கிக் கொண்டு
நான் நடந்த பாதையிது
நீ காண்பது உன் காலடியல்ல - அது
நான் நடந்த பாதபடி என்றார்
கண் மூடி கரங்கூப்பி
கண் திறந்து பார்த்தபோது
கனவோ கலைந்து விட்டது.

# மூன்றெழுத்தின் மேன்மை

(தேவன் முதல் சீயோன் வரை)

**(சங்கீதம் 119 : 18)**

| | | |
|---|---|---|
| ஆதியில் இருந்தவர் | **தேவன்** | மூன்றெழுத்து |
| தேவன் அசைவாடின இடம் | **ஜலம்** | மூன்றெழுத்து |
| ஜலமிருந்த இடம் | **நிலம்** | மூன்றெழுத்து |
| நிலத்தில் தேவன் படைத்த மனிதன் | **ஆதாம்** | மூன்றெழுத்து |
| ஆதாமுக்கு துணையான | **ஏவாள்** | மூன்றெழுத்து |
| இருவரும் இருந்த இடம் | **ஏதேன்** | மூன்றெழுத்து |
| இருவரில் இருந்தது | **ஜீவன்** | மூன்றெழுத்து |
| ஜீவனை பறிக்க வந்தவன் | **பிசாசு** | மூன்றெழுத்து |
| பிசாசுக்கு உதவின | **பாம்பு** | மூன்றெழுத்து |
| பாம்பு காட்டின | **பழம்** | மூன்றெழுத்து |
| பழம் தொங்கின | **மரம்** | மூன்றெழுத்து |
| பழத்தால் வந்தது | **இச்சை** | மூன்றெழுத்து |
| இச்சையால் உண்டான | **பாவம்** | மூன்றெழுத்து |
| பாவத்தால் வந்த | **சாபம்** | மூன்றெழுத்து |
| சாபத்துடன் சேர்ந்த | **வியாதி** | மூன்றெழுத்து |
| அதோடு இணைந்த | **வறுமை** | மூன்றெழுத்து |
| இதனால் மனிதன் நிலை | **அடிமை** | மூன்றெழுத்து |
| அடிமைக்கு தேவை | **மீட்பு** | மூன்றெழுத்து |
| மீட்பின் கிரயம் | **குருதி** | மூன்றெழுத்து |
| குருதியை சிந்தனவர் | **இயேசு** | மூன்றெழுத்து |
| இயேசு சுமந்த | **சிலுவை** | மூன்றெழுத்து |
| சிலுவையில் இயேசுவிட்ட | **ஜீவன்** | மூன்றெழுத்து |
| அந்த ஜீவனைபெற்றோர் அடைவது | **மீட்பு** | மூன்றெழுத்து |
| மீட்பைபெற்றோர் சேர்வது | **சீயோன்** | மூன்றெழுத்து |

# கடின பாதை
(உபாகமம் 1 : 31)

தொலைதூர பயணமிது - என்றாலும்
தொடர்ந்து சென்றேன் நான்
தொடர்ந்த தடைகள் பல
தொய்ந்ததென் உள்ளமங்கே

பாதையோ கரடு முரடு - கண்ட
பள்ளத்தாக்கோ படு ஆழம்
பசியும் பட்டினியுமாய் - அந்த
பாதை வழி செல்லும்போது

சோர்ந்து போன உள்ளத்தோடு - பின்
சேர்ந்துக் கொண்டது பெலவீனம்
சேரமுடியாத இலக்கு என்று
சேதம் கொண்டதென் விசுவாசம்

கண்களை இருள் கவ்விக் கொள்ள - என்
கால்களிரண்டும் பின்னலிட
கரங்களிரண்டை விரித்தபடி
கால்கள் இடறி நான் விழுந்தேன்

கண்களை திறந்து பார்த்தபோது - என்
கர்த்தரின் கரங்களில் நானிருந்தேன்
கனிவுடன் என்னைச் சுமந்தபடி
கடினப் பாதையில் நடந்து வந்தார்

தந்தைதன் பிள்ளை தனை - நாளும்
தாங்கிச் சுமப்பதுபோல்
என்னை ஏந்திச் சுமந்த அந்த
அன்பை எண்ணிப் பார்த்தேன்

நன்றி சொல்ல நான் நினைத்தேன் - ஆனால்
நாவெனக்கு எழ வில்லை
கண்ணீர் மட்டும் காணிக்கையாக்கி
கரங்களிரண்டை கூப்பி நின்றேன்.

# இயேசுவைக் கண்டேன்

(யோவான் 20 : 25)

| | | | |
|---|---|---|---|
| என்னைக் | காண | வாயென | அழைத்தீர் |
| உம்மைக் | காண | ஓடி | வந்தேன் |
| தேடுங்கள் | என்முகம் | கண்டடை | வீர்கள் |
| என்றீர் | வந்தேன் | கண்டே | னும்மை |

| | | | |
|---|---|---|---|
| கோரக் | குருசில் | உம்முடல் | கண்டேன் |
| உடலில் | பட்ட | காயங் | கண்டேன் |
| காயந் | தன்னில் | குருதியை | கண்டேன் |
| குருதி | நீரென | கொட்டக் | கண்டேன் |
| கொட்டும் | குருதியில் | மீட்பைக் | கண்டேன் |
| எந்தன் | பாவம் | அகலக் | கண்டேன் |
| முந்தின | சாபம் | மாறக் | கண்டேன் |
| முற்றின | வியாதி | நீங்கக் | கண்டேன் |
| பற்றின | பிசாசு | ஓடக் | கண்டேன் |
| பலவீ | னந்தான் | மறையக் | கண்டேன் |
| பாழுந் | தரித்திரம் | விலகக் | கண்டேன் |
| பேரொளி | என்மேல் | வீசக் | கண்டேன் |
| பரிசுத் | தாவி | இறங்கக் | கண்டேன் |
| பரலோ | கத்தின் | தரிசனங் | கண்டேன் |
| பரம | பிதாவின் | திருமுகம் | கண்டேன் |
| பக்கம் | நிற்கும் | ஏசுவைக் | கண்டேன் |
| பக்தர் | சூழ்ந்து | இருக்கக் | கண்டேன் |
| தூதர் | கூட்டம் | துதிக்கக் | கண்டேன் |
| இத்தனை | காட்சி | தரிசனங் | கண்டேன் |
| இதயத்தில் | ஏசுவை | ஏற்றுக் | கொண்டேன் |

# அவர் நாமம்

(லூக்கா 1 : 3)

| | | | |
|---|---|---|---|
| எத்தனை | நாமங்க | ளிருந்தாலும் | |
| அத்தனைக் | கும்மிது | மேலானநாமம் | - எபே. 1 : 20 |
| அண்டினோர் | தம்மை | அப்பாஎன்றிட | |
| அதிகா | ரந்தனை | அளித்தநாமம் | - யோ. 1 : 12 |
| இத்தறை | மாந்தர் | ரட்சிப்படைய | |
| இகமதி | லிருக்கும் | ஒரேநாமம் | - அப். 4 : 12 |
| பாவ | பாரத் | தண்டனைநீக்கி | |
| பாவ | மன்னிப் | பருளும்நாமம் | - லூக். 24 : 47 |
| தேவை | எதுவா | யிருந்தாலும் | |
| கேட்டா | லவர்க்கு | அருளும்நாமம் | - யோ. 14 : 14 |
| பொல்லா | பேய்கள் | நடுநடுங்கி | |
| நில்லா | நிலையில் | நீக்கும்நாமம் | - மாற். 16 : 17 |
| இருவர் | மூவர் | கூடுமிடத்தில் | |
| நடுவில் | வந்து | நிற்கும்நாமம் | - மத். 18 : 20 |
| அவரை | நம்பும் | அனைவருக்கும் | |
| நித்திய | ஜீவன் | அளிக்கும்நாமம் | - யோ. 20 : 31 |
| மூன்று | உலகில் | உள்ளோர்தமது | |
| முழங்கா | லனைத்தும் | முடக்கும்நாமம் | - பிலி. 2 : 10 |
| ராஜாதி | ராஜா | அவர்நாமம் | - வெளி 19 : 16 |
| கர்த்தாதி | கார்த்தா | அவர்நாமம் | - வெளி 19 : 16 |
| வார்த்தை | என்பது | அவர்நாமம் | - வெளி 19 : 13 |
| வல்லமை | தேவன் | அவர்நாமம் | - ஏசா. 9 : 6 |
| பரிமள | தைலம் | அவர்நாமம் | - உன். 1 : 3 |
| பலத்த | துருகம் | அவர்நாமம் | - நீதி. 18 : 10 |
| பரிசுத்த | ரென்பது | அவர்நாமம் | - ஏசா. 57 : 15 |
| அதிசய | மென்பது | அவர்நாமம் | - நியா. 13 : 18 |
| ஆலோசனை | கர்த்தர் | அவர்நாமம் | - ஏசா. 9 : 7 |
| நித்திய | பிதா | அவர்நாமம் | - ஏசா. 9 : 7 |
| சமாதான | பிரபு | அவர்நாமம் | - ஏசா. 9 : 7 |
| யேகோவா | என்பது | அவர்நாமம் | - யாத். 6 : 3 |

அதுவே

## இயேசு என்னும் திருநாமம்

லூக்கா 1 : 31

# முக்தி மார்க்கம்

(அப்போஸ்தலர் 16 : 31)

| | | |
|---|---|---|
| அகமதி | னிருளை | நீக்கிடவே |
| ஆண்டவர் | இயேசு | ஒளியாக |
| இரண்டு | ஆயிர | மாண்டுகள்முன் |
| ஈவாய் | மேதினிக் | கருளப்பட்டு |
| உலகின் | பாவ | சாபம்போக்க |
| ஊரெல் | லாமவர் | சுற்றியலைந்து |
| எட்டுத் | திக்கின் | மாந்தர்பாவம் |
| ஏற்ற | தேவ | ஆட்டுக்குட்டி |
| ஐந்து | கண்ட | மாந்தர்கேட்க |
| ஒப்பில்லா | உப | தேசமளித்து |
| ஓய்வில் | லாமல் | உழைத்தவரும் |
| ஔஷத | மாகி | பிணிபலநீக்கி |
| பின்னோர் | நாளில் | சிலுவைமீதே |
| தன்னுயி | ரீந்து | தாரணியோர்க்கு |
| மீட்பைத் | தந்து | மீண்டுமுயிர்த்து |
| மூன்றாம் | நாளில் | காட்சியளித்து |
| அகண்ட | தளமது | செல்லும்முன்னே |
| அவனியில் | மீண்டும் | வருவேனென்று |
| அருளின | அந்த | வாக்கதனை |
| அஃதே | நம்பி | முக்தியடைவாய் |

# நானே

(யோவான் 14 : 6)

| | | | |
|---|---|---|---|
| நானே | வாசல் | என்றார் | இயேசு |
| நீயதன் | வழியே | உள்ளே | செல்வாய் |
| நானே | வழியாம் | என்றார் | இயேசு |
| நீயதில் | சென்றால் | என்றும் | இடறாய் |
| நானே | சத்யம் | என்றார் | இயேசு |
| நீயதில் | நடந்தால் | சுத்தம் | ஆவாய் |
| நானே | ஜீவன் | என்றார் | இயேசு |
| நீயதைக் | கண்டால் | சாவை | வெல்வாய் |
| நானே | ஜீவஅப்பம் | என்றார் | இயேசு |
| நீயதை | உண்டால் | நிலைத்து | நிற்பாய் |
| நானே | நல்லமேய்ப்பன் | என்றார் | இயேசு |
| நீயவர் | பின்செல் | மேய்ச்சல் | காண்பாய் |
| நானே | உயிர்ப்பு | என்றார் | இயேசு |
| நீயதை | ஏற்றால் | எழுவாய் | ஓர்நாள் |
| நானே | நானே | என்றே | நீயும் |
| நாளும் | வாயால் | சொன்னது | போதும் |
| நானே | என்னும் | நாதன் | பின்னே |
| எல்லாம் | நீரே | என்றே | செல்வாய் |
| என்றும் | எல்லாம் | நலமே | காண்பாய் |

# கல்வாரியில் பூத்தமலர்கள்

(இயேசு சிலுவையில் சொன்ன 7 வார்த்தைகள்)

**(லூக்கா 23 : 34)**

| | | |
|---|---|---|
| அறையப்பட்ட | கள்ளர் | நடுவில் |
| அறைந்தனர் | அன்பர் | ஏசுவையே |
| அறைந்தக் | கள்ளரை | கண்டவரும் |
| அறியாமல்தான் | செய்யும் | இவர்களை |
| அருளாளப்பா | மன்னியு | மென்று |
| அன்புடன் | சொன்ன | போதவர் |
| அகமதில் | **பூத்தது** | **மன்னிப்பு** |

**(லூக்கா 23 : 43)**

| | | |
|---|---|---|
| இருவரிலொருவன் | இவரைப் | பார்த்தும் |
| இராஜ்யமதிலே | நீர்வரும் | போதும் |
| இதயத்திலென்னை | நினைத்திடு | மென்றான் |
| இதனைக்கேட்ட | இயேசு | திரும்பி |
| இன்றேஎன்னுடன் | இருப்பாய் | என்றார் |
| இவனுக்கங்கே | இவ்வருள் | வாக்கால் |
| இதயத்தில் | **பூத்தது** | **ரட்சிப்பு** |

**(லூக்கா 19 : 26)**

| | | |
|---|---|---|
| மரமதில்தொங்கும் | மகனைக் | கண்ட |
| மரியாள்தானும் | மனங் | கலங்கி |
| மகனுடனன்பும் | மாண்டது | என்று |
| மனமதுதளர்ந்து | மகனைப் | பார்க்க |
| மாதேஅங்குன் | மகனைப் | பாரென |
| மார்பதில்சாய்ந்த | சீடனைக் | காட்ட |
| மாதவள்மனதில் | **பூத்தது** | **அன்பு** |

(மத்தேயு 27 : 46)

| | | |
|---|---|---|
| பாவம்பாரா | சுத்தக் | கண்ணர் |
| பாவம்ஏற்ற | ஏசுவை | விட்டே |
| பார்வையை | சற்றே | திருப்பினதாலே |
| பார்தளம்மீதே | காரிருள் | மூட |
| பரமன் | ஏனெனை | கைவிட்டீர்என |
| பரிதவித்தவரும் | பதறிக் | கேட்டிட |
| பார்வையில் | **பூத்தது** | **அங்கலாய்ப்பு** |

(யோவான் 19 : 28)

| | | |
|---|---|---|
| தாரணிக்கவரே | தண்ணீர் | ஊற்றாய் |
| தாகந்தீர்க்க | வந்தவ | ரங்கே |
| தாகம்தாகம் | என்ற | போது |
| தாழஇருந்தோன் | அறியா | ததினால் |
| தாகம்தீர்க்க | காடி | கொடுத்தான் |
| தாகம்என்றது | ஆத்தும | மீட்பால் |
| தேகத்தில் | **பூத்த** | **பரிதவிப்பு** |

(யோவான் 19 : 30)

| | | |
|---|---|---|
| வந்தார் | இயேசு | இழந்ததைமீட்க |
| வந்தார் | தேவன் | ஜீவன்கொடுக்க |
| வந்தார் | பரமன் | பிசாசைஅழிக்க |
| வந்தவர் | எல்லாம் | செய்துமுடித்து |
| வான்தனை | நோக்கி | முடிந்ததுஎன்று |
| வானவர் | சொல்லி | முடித்தபோதவர் |
| வதனத்தில் | **பூத்தது** | **பூரிப்பு** |

(லூக்கா 23 : 46)

| | | |
|---|---|---|
| உலகத்தோற்றம் | முதலே | இயேசு |
| உலகோர்பாவம் | மீட்கத் | தன்னை |
| உலகில்மனித | சாயல் | கொண்டு |
| உலகோர்பாவம் | சாபம் | ஏற்று |
| உலகம்சிலுவையில் | அறைந்த | போதவர் |
| உவகையுடனே | சொன்ன | வாக்கால் |
| உள்ளத்தில் | **பூத்தது** | **ஒப்புவிப்பு** |

# போவதே மேல்

(புத்தாண்டுக் கவிதை)
(லூக்கா 13 : 6-9)

போனராவில் படுத்துநினைத்தேன்
பொழுதுவிடிந்தால் புத்தாண்டு
காணஎன்ன தவமிருந்தேன்நான்
கர்த்தரின் கருணைஒன்றன்றி
கணப்பொழுதெண்ணிப் பார்த்தேனேனெனை
கர்த்தர் காத்தாரிவ்வாண்டு
கனிதரும்ஜீவியம் ஒன்றைத்தானே
கருத்தில்கொண்டு எனைக்காத்தார்
முந்தினமூன்று ஆண்டுகளாக
முழுதும்கனியற் றிருந்தாலும்
முற்றிலுமென்னை முறிக்காதிருந்த
முன்னவரென்முன் நின்றவராய்
கரங்களைவிரித்து கண்ணீரோடெ
கனிந்துரைத்தா ரவரெனக்காக
இருக்கட்டும் இவனிவ்வொருஆண்டும்
இனியாகிலுமிவன் கனிதருவான்
இந்தஒருமுறை விட்டுவிடும்
இனிவருமாண்டதில் வெட்டிடலாம்
என்றவர்வார்த்தை கேட்டேன்நானெனை
எண்ணியொருமுறை பார்த்தேன்நான்
எத்தனைகனிவு எத்தனைதயவு
இத்தனைநன்மை நான்பெற்றும்
இவ்வளவன்புடன் ஈவுஇரக்கம்
இயேசுஎன்னிடம் காட்டிடினும்
இனியும்கனியா மரமாய்நின்றால்
இருந்தென்னாவது போவதேமேல்.

# 38 வருட வியாதியுள்ளவன்

(யோவான் 5 : 1-12)

| | | |
|---|---|---|
| யூதர்கள் | பண்டிகை | நாளதிலே-நல்ல |
| போதகர் | இயேசுவும் | போகின்றார் |
| பெதஸ்தா | என்றொரு | குளமருகில்-நோயால் |
| அவஸ்தை | படுகின்ற | பலர்கூடி |
| குளமது | கலங்கிடும் | நேரமதில்-தங்கள் |
| நலமது | நாடியே | குதித்திடுவார். |
| பார்க்க | இயலா | குருடர்களும்-தானாய் |
| நடக்க | இயலா | முடவர்களும் |
| சூம்பின | உறுப்பு | உடையவரும்-அங்கு |
| சொஸ்த | மடைந்து | செல்லுகிறார் |
| மூன்று | பத்துடன் | எட்டாண்டு-அங்கு |
| முடங்கிக் | கிடக்கும் | நோயாளி |
| குளமது | கலங்கிடும் | நேரமதில்-எனை |
| கொண்டு | விடுவார் | யாருண்டு? |
| என்றே | ஏங்கிடும் | நேரமதில்-தான் |
| இயேசு | அவனிடம் | செல்கின்றார் |
| சுகமதை | அடைந்திட | வேண்டுமென-உன் |
| அகமதில் | ஆர்வம் | இருந்திட்டால் |
| எழுந்து | நடஉன் | படுக்கையுடன்-என |
| இயேசு | சொன்னதை | கேட்டவுடன் |
| ஆவலாய் | அவனும் | நடந்திட்டான்-தேவ |
| ஆலயம் | இருக்கும் | இடம்நோக்கி |
| எந்தன் | வியாதிப் | படுக்கையிலே-இங்கு |
| எனக்கு | உதவி | செய்வதற்கு |
| எவரும் | இல்லை | என்றெண்ணி-தினம் |
| ஏங்கித் | தவிக்கும் | மானிடனே |
| உந்தன் | வியாதிப் | படுக்கையிலே-இன்று |
| உனக்கு | உதவிட | இயேசுவுண்டு |
| ஒருமுறை | அவரை | நம்பிடுவாய்-நீயும் |
| உடனே | எழுந்து | நடந்திடுவாய் |

# தேவாலயத்தில் தேவவல்லமை

**(லூக்கா 4 : 31-37)**

அழகான ஆலயத்தில்
அடியார்கள் சூழ்ந்திருக்க
அதிகாரப் போதனையால்
அடியார்கள் அதிசயிக்க
அந்த நேரத்திலே
ஆரவார சத்தம்கேட்க
அங்கிருந்த அனைவருமே
அத்திசையை நோக்கிப்பார்க்க
அசுத்த ஆவியுடன்
அங்கொருவன் நின்றிருக்க
அறிக்கையவன் செய்கிறான்
ஆண்டவரே நீர்பரிசுத்தர்
அதைகேட்ட ஆண்டவரோ
அகமகிழ்ந்து விடவில்லை
அதிகாரத்தோ டதட்டிடவே
அசுத்தாவி அலைக்கழித்து
அவனைவிட்டுப் போனபின்
அவர்கீர்த்தி பரவிற்று

# கானாவூர் கலியாணம்

(யோவான் 2 : 1-11)

கலியாண விருந்தொன்று
கானாவூரில் நடந்தபோது
கர்த்தரும் அங்கிருந்தார்
கனிரசமோ காலியங்கே
அன்னையவள் பரிந்துரைத்தாள்
ஆண்டவராம் இயேசுவிடம்
ஆ!என் வேளைவரும்
அதுவரையில் பொறுத்திரென்றார்
அமைதியோடு திரும்பியன்னை
அங்குநின்ற ஆட்களிடம்
அவரென்ன சொல்கிறாரோ
அப்படியே செய்களன்றாள்
கர்த்தரின் வேளைவர
கற்சாடியும் தண்ணீரால்
கணிசமாய் நிரப்பினபின்
கனிரசமாய் மாறினது
அள்ளிப் பருகினோர்
அவர்மகிமை கண்டனர்
ஆனந்தக் களிப்புடன்
ஆண்டவரைப் புகழ்ந்தனர்
உன்வாழ்வில் ஓர்குறைவு
உள்ளத்தில் ஓர்வெறுமை
உடனடியாய் உனக்கின்று
உதவிசெய்வார் யாருண்டு?
அழைத்திடுநீ இயேசுவையே
அப்பொழுதே வந்திடுவார்
அவர்வேளை வரும்போது
அற்புதங்கள் செய்திடுவார்

# பெரும்பாடுள்ள ஸ்திரீ

**(மாற்கு 5 : 25-34)**

பன்னிரெண்டு வருடமாய்
அவள்பட்ட பாட்டுக்கு
பாரோர் வைத்தபெயர்
பாவம் பெரும்பாடு
நங்கையவள் அங்கமெல்லாம்
நாள்தோறும் நலிந்துபோக
மங்கையவள் மனதினிலே
மரணத்தின் இருள்சூழ
அந்த நேரத்திலே
அருமருந்தாம் ஆண்டவரும்
ஆரவார கூட்டத்துடன்
அவ்வழியே பவனிவர
இந்த இயேசுவையே
இவளும்தன் வைத்தியராய்
இதயத்தில் ஏற்றவளாய்
இருப்பிடத்தை விட்டெழுந்து
வஸ்திரத்தின் ஓரமதை
வாஞ்சையுடன் தொட்டபோது
வல்லமை வந்திறங்கி
வஞ்சியவள் சுகமானாள்
ஆறாத புண்ணென்று
அனுதினமும் அழுகிறாயோ
தீராத நோயால்நீ
தினம்தினம் சாகிறாயோ
மாறாத இயேசுஉண்டு
மனதுருக்கம் அவரிலுண்டு
நேராக நீவந்தால்
நேர்த்தியான சுகமுண்டு.

# மனிதனைப் பிடிக்க அழைத்தல்

(லூக்கா 5 : 1-10)

கெனசரேத்துக் கடலோரம்
நாசரேத்து நாயகனும்
சனநெருக்கம் கூடக்கண்டு
சத்தியத்தைப் போதித்தார்
போதனை முடிந்தபின்பு
பேதுரென்னும் சீமோனை
போங்களங்கு ஆழத்திற்கு
போதுமானமீன் கிடைக்கும்
என்றுசொன்ன இயேசுவிடம்
இரவெல்லாம் வலைபோட்டும்
விரயம்தான் மிச்சமிங்கு
வீணாக வலைவிரித்தோம்
ஆனாலும் ஐயனேஉம்
ஆணைப்படி செய்திடுவோம்
என்றுகூறி ஆழம்போய்
நின்றுவலை வீசினார்கள்
வலைநிறைய மீன்விழுந்து
வலையிழுக்க வலுவிழந்து
அங்கிருந்த கூட்டாளியை
அவசரமாய்க் கூப்பிட்டு
ஒருவலையில் பிடித்தமீனை
இருவகையாய் ஏற்றிக்கொண்டு
இக்கரைக்கு வந்தபின்பு
இயேசுபாதம் பற்றிக்கொண்டு
ஆண்டவரே நான்பாவி
அடிமையை விட்டகலும்
என்றுசொன்ன சீமோனை
ஏறிட்டுப்பார்த்த இயேசு
இன்றுமுதல் நீஎனக்காய்
மனிதர்களைத் தான்பிடிப்பாய்
என்றவார்த்தை கேட்டசீமோன்
எல்லாமே விட்டுவிட்டு
மகிழ்ச்சியோடு இயேசுவின்பின்
மனிதர்களைப் பிடிக்கச்சென்றான்

# பலவித வியாதியஸ்த்தர்

(மத்தேயு 4 : 23,24)

கதிரவன் மறைந்து
காரிருள் சூழ்ந்தநேரம்
இருள்சூழ்ந்த மனிதர்கள்
இயேசுவிடம் வந்தனர்
தீராதநோய் கொண்டோர்
திரள்கூட்டம் நின்றிருக்க
மாறாத வேதனையால்
மனம்நொந்த மக்கள்கூட்டம்
அசுத்தாவி வந்து
அலைக்கழித்த ஒருகூட்டம்
அத்தனைக் கூட்டங்களும்
அலையலையாய் வந்தபோது
ஆண்டவராம் இயேசுவும்தான்
அற்புதங்கள் செய்திட்டார்
அத்தனைப் பேருமங்கே
ஆண்டவரின் வல்லமையால்
நோய்நீங்கி பேய்விலகி
வாய்திறக்க வழியின்றி
வந்தவழி சென்றனரே
வாழ்வில்ஒளி கண்டனரே
இருள்சூழ்ந்த மனிதன்நீ
இன்றிருளில் வாழ்கின்றாய்
இருள்நீக்கி ஒளியேற்ற
அருள்நிறைந்த இயேசுவுண்டு

# லாசருவை எழுப்பினது

(யோவான் 11 : 1-45)

மரியாளின் வீட்டினிலே
மரணஇருள் சூழ்ந்திருக்க
மன்னவன் இயேசுதாமும்
தாமதமாய் தான்வரவே
மகிபனை பார்த்தங்கே
மார்த்தாளும் கதறுகின்றாள்
*"ஐயனே நீர்இங்கு*
*அன்றே வந்திருந்தால்*
*மெய்மரணம் ஒன்றிங்கு*
*பொய்த்திருக்கக் கூடுமன்றோ"*
என்றுரைத்த மார்த்தாளை
ஏறிட்டுப்பார்த்த இயேசு
எழுப்புவேனுன் தமையனை
எடுங்களந்த கல்லைஎன்றார்
நாலுநாட்கள் ஆனதினால்
நாறுமந்த உடலென்று
நங்கையவள் அங்கலாய்த்து
நாதரிடம் சொன்னபோது
உனக்குள்ளே நம்பிக்கை
உண்மையாய் இருந்திட்டால்
உன்தமையன் உயிருடனே
உன்னிடமே வந்திடுவான்
என்றுரைத்த இயேசுவங்கே
எதிரொலிக்கும் தன்குரலால்
லாசருவே எழுவாயென
ஏகசத்த மாயழைக்க
எல்லோரும் பார்த்திருக்க
எழுந்துவிட்டான் லாசருவும்
கட்டவிழ்த்து விடுங்களென்ற
கட்டளையை முடித்தபோது
கால்நடையாய் லாசருவும்
கர்த்தரிடம் வந்துநின்றான்
ஆண்டவரின் வார்த்தைகளை
அப்படியே நம்பிவிட்டால்
அவன்வாழ்வு முடிவதில்லை
முடிந்தாலும் வாழ்ந்திடுவான்

# நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன்

(மத்தேயு 8 : 5-13)

வேலைக்காரன் வியாதிப்படுக்கையில்
வேதனைப்பட்டான் நூற்றுக்கதிபதி
வேண்டிநின்றான் வேதனைநீங்க
அரசனுக்கடிமை நானென்றாலும்
அடிமைகளெனக்கு ஈரைம்பதுபேர்
வாஎன்றழைத்தால் வந்தவன்நிற்பான்
போஎன்றொருசொல் போதும்போவான்
செய்யெனபணித்தால் செய்துமுடிப்பான்
எனினும்என்மனை நீர்எழுந்தருள
எள்ளளவும்நான் பாத்திரனல்ல
இங்கிருந்தேஓர் வார்த்தைசொல்லும்
எங்கிருந்தாலும் பிழைப்பானென்று
இயம்பினவார்த்தை கேட்டஇயேசுவும்
இஸ்ரவேலிலும் இப்படிப்பட்ட
விசுவாசத்தை கண்டிலனென்றார்
புறம்பேஇருப்பார் புத்திரர்-ஆனால்
புறம்பேஇருப்போர் பந்தியிலிருப்பர்
என்றேகூறி இவனைநோக்கி
இனிநீபோவாய் இயம்பினபடியே
உனக்காகும்நீ உவகைகொள்ளென
உறைத்தநாழியில் உடல்நலம்பெற்றான்
நம்பிக்கைஒன்றே நாதரின்நாட்டம்
நம்பிடுவாய்நீ நலமதுகொள்ள
நல்லொருவார்த்தை சொன்னால்போதும்
நாளும்நன்மைகள் வந்துனைச்சேரும்.

# கூனியை குணமாக்குதல்

(லூக்கா 13 : 11-13)

பத்துட னெட்டு ஆண்டுகள் ஸ்திரீயை
கட்டிப் போட்டான் சாத்தான் அதனால்
எண்சாண் உடலது இரண்டாய் வளைந்து
கூனிக் குருகி குருந்தடி பிடித்து
எவ்வள வேணும் நிமிர்ந்து நிற்க
இயலா நிலையில் இருந்தப் பெண்ணை
தம்மிடம் வாவென அழைத்த இயேசு
தன்கரம் நீட்டி அவளைத் தொட்டு
இன்றோ டுன்பெல வீனந் தன்னை
எடுத்துப் போட்டேன் என்றவர் சொல்ல
அந்த நேரமே அவளும் நிமிர

தொடர்ச்சி →

அங்கே நின்ற ஏசுவைக்
கண்டு
ஆண்டவ ருக்கே மகிமை
என்று
அகமதி லவரைப் போற்றிச்
சென்றாள்
பாவம் வியாதி வருத்தம்
வேதனை
பலவித சோதனை பிசாசின்
தொல்லை
இவ்வித பாரம் உந்தன்
மீதில்
ஏற்றி வைத்து சாத்தான்
உன்னை
தலைதனை குனிந்து நிமிர
விடாமல்
தடைபல செய்வான் தரணியில்
உனக்கு
அவைகளை நீக்கி நிமிரச்
செய்ய
இயேசு அழைக்க இன்றே
வாராய்

# கல்லறையிலிருந்து வந்த அசுத்தாவி பிடித்தவன்

(மாற்கு 5 : 2-15)

| | | | |
|---|---|---|---|
| மண்ணில் | விண்ணின் | நாயகன் | பிறப்பால் |
| மாநில | சரித்திரம் | இரண்டாய்ப் | பிரிய |
| முந்தின | சரித்திரம் | கி.மு. | ஆனது |
| பிந்தின | சரித்திரம் | கி.பி. | ஆனது |
| மண்ணாம் | மனிதன் | மனதில் | இயேசு |
| மலர்ந்தால் | மனிதன் | வாழ்வும் | இரண்டாம் |
| **முந்தின** | **வாழ்வு** | **மறைந்து** | **போயவன்** |
| **பிந்தின** | **வாழ்வு** | **மலர்ந்திடும்** | **பாராய்** |
| கல்லறை | அருகில் | படுக்கைப் | போட்டு |
| கல்லால் | தன்னைக் | காயப் | படுத்தி |
| இருந்த | வஸ்த்திரம் | இழந்து | நின்று |
| இவனை | அடக்க | ஆட்கள் | இன்றி |
| இரண்டு | ஆயிரம் | பிசாசு | பிடித்த |
| இருண்ட | வாழ்வு | வாழ்ந்த | நீசன் |
| இயேசுவின் | அருகில் | வந்த | போதவன் |
| **முந்தின** | **வாழ்வு** | **மறைந்து** | **போயவன்** |
| **பிந்தின** | **வாழ்வு** | **மலர்ந்ததை** | **பாராய்** |
| கர்த்தரின் | பாதம் | பற்றிக் | கொண்டு |
| காயம் | ஆறிக் | களிப் | படைந்து |
| சாத்தான் | விலகி | சத்தம் | இன்றி |
| வஸ்திரந் | தரித்து | வாய்தனை | மூடி |
| அன்பரின் | பாதம் | வந்தமர்ந் | திட்டான் |
| உந்தன் | வாழ்வும் | இந்த | நிலையா? |
| இந்த | இயேசுன் | அகமதில் | பிறந்தால் |
| **முந்தின** | **வாழ்வு** | **மறைந்து** | **போயுன்** |
| **பிந்தின** | **வாழ்வு** | **மலர்வதை** | **பார்ப்பாய்** |

# திமிர்வாதக்காரன் குணமடைதல்

(மத்தேயு 9 : 2-8)

கூரை வேய்ந்தவீடதிலே
கூடிநின்ற மானிடரால்
வாசலில் நிற்பதற்கும்
வகையின்றி திரள்கூட்டம்
வசனத்தை கேட்பதற்கு
வாஞ்சையோடு நின்றபோது
தேடிவந்த நான்குபேரின்
தோள்சுமந்த கட்டிலிலே
திமிர்வாதம் கொண்டொருவன்
திராணியற்று படுத்திருக்க
நாதரிடம் கொண்டுசெல்ல
நல்லவழி ஏதுமின்றி
கூரையை பிரித்துகீழே
வைத்தனராம் கட்டிலையே
நாலுபேரின் நம்பிக்கை
நன்கறிந்த இயேசுதாமே
மகனேஉன் பாவங்கள்
மன்னித்தேன் நானதனால்
கட்டிலைநீ எடுத்துக்கொண்டு
கடந்துசெல் வீட்டுக்கென
ஏசுபிரான் சொன்னபோது
எல்லோரும் பார்த்திருக்க
எடுத்தான்தன் படுக்கையதை
நடந்தான்தன் வீடுநோக்கி
பாவத்தால் வந்தநோய்க்கு
பரிகாரம் இயேசுதானே
வேகம்நீ வந்திடுவாய்
விரைவாய் சுகம்தந்திடுவார்.

# யவீருவின் மகளை எழுப்புதல்

(மாற்கு 5 : 35-43)

| | | | |
|---|---|---|---|
| இக்கரை | வந்த | இயேசுவின் | பின்னே |
| அக்கறை | கொண்ட | மானிடர் | சேர |
| ஆலயத் | தலைவன் | யவீரு | என்பான் |
| ஆண்டவர் | பாதம் | பணிந்து | சொன்னான் |
| ஐயா | என்மகள் | மரணப் | பிடியில் |
| மரணம் | அவள்கை | பிடிக்கும் | முன்னே |
| மருந்தாம் | உம்கை | அவள்மேல் | வையும் |
| அப்பொழு | தவளும் | பிழைப்பா | னென்றான் |
| அவனது | இல்லம் | செல்லும் | போது |
| அங்கோர் | நங்கை | தாமதம் | செய்ய |
| அந்த | நேரம் | அங்கே | வந்தோர் |
| மரணமுன் | மகளை | தழுவின | தென்றார் |
| அந்த | வார்த்தை | கேட்ட | எந்தை |
| பயமே | வேண்டாம் | நம்பென் | வாக்கு |
| என்றவர் | இல்லம் | வந்து | சேர்ந்து |
| சந்தடி | பண்ணி | சத்தம் | போட்ட |
| மக்கள் | கூட்டம் | மாறச் | செய்து |
| பிள்ளை | கிடந்த | இடத்தில் | வந்து |
| தன்கரம் | நீட்டி | வளைகரம் | பற்றி |
| தலித்தா | கூமி | என்றே | சொல்ல |
| எழுந்தாள் | சிறுமி | நடந்தாள் | நன்றே |
| கண்டவர் | கொண்டனர் | கடுமாச் | சர்யம் |
| கர்த்தர் | தனது | கையதை | வைத்தால் |
| மூடின | கண்ணது | முழுதும் | திறந்து |
| வாடின | வாழ்வது | வந்தே | மலரும் |

# கானானிய ஸ்தீரியின் மகள்

(மத்தேயு 15 : 22-28)

கானானிய பெண்ணொருத்தி
கண்ணீருடன் கதறுகிறாள்
பொல்லாத பேயொன்று
பிடித்ததனால் என்மகளும்
சொல்லொணா வேதனையால்
சோர்ந்தங்கே கிடக்கிறாள்
தாவீதின் குமாரன்நீர்
தாமதம்தான் செய்யாமல்
இரங்கும் என்மகளுக்கு
இரக்கத்தின் சிகரம்நீர்
என்றவளும் வேண்டுகையில்
ஏறிட்டுப் பார்த்தஇயேசு
நான்கொடுக்கும் அப்பமது
நாய்க்கல்ல சேய்க்குத்தான்
நல்லதல்ல நல்லஅப்பம்
நாய்களுக்குக் கொடுப்பதென்றார்
அன்னையவள் அயறாமல்
அப்பமது பிள்ளைக்குத்தான்
அதை அறிவேன்
ஆயினும் இம்
மேதினியில் இதுவழக்கம்
மேஜையடி விழும்துணிக்கை
நாய்தின்னத் தடையேது
நானிதைத்தான் நவிலுகிறேன்
என்றுரைத்த ஏந்தலையே
ஏறிட்டுப் பார்த்தஇயேசு
நங்காய் உன்நம்பிக்கை
நானிலத்தில் மாபெரிது
இந்நேரம் உன்மகளும்
இயல்புநிலை வந்துவிட்டாள்
பதறாமல் வீடுசென்று
பார்ப்பாயுன் மகளைஎன்றார்
இவர்க்குத்தான் என்றில்லை
இயேசுபிரான் அருளதையே
எவர்நம்பி வந்தாலும்
எப்பொழுதும் பெற்றிடலாம்.

# பேதுருவின் மாமி குணமாதல்

(மத்தேயு 8 : 14-15)

இரண்டு சீடருடன்
இயேசுவும் செல்கிறார்
வேரிரண்டு சீடர்கள்
இல்லமதை நோக்கியே
இல்லமதில் சென்றவுடன்
இவ்விரண்டு சீடர்களும்
இங்கெமது மாமிக்கோ
இடைவிடாத ஜூரமென்றார்
கட்டிலின் அருகில்சென்று
கரம்நீட்டி கைப்பிடித்தார்
கடுஞ்சுரம் நீங்கிடவே
கட்டிலை விட்டெழுந்தாள்
தன்கரத்தால் தூக்கிவிட்ட
தம்பிரான் இயேசுவுக்கு
தன்கரத்தால் பணிவிடையை
தாமதமின்றி தானேசெய்தாள்
வியாதிப் படுக்கையைநீ
விட்டெழும்ப முடியவில்லை
வேதனைப் பெருமூச்சால்
பேச்சுவர வழியில்லை-உன்
படுக்கைக்குப் பக்கத்திலே
பரமன்இயேசு நிற்கிறார்
பாங்காய் எழுந்தவர்க்குப்
பணிவிடைகள் செய்திடுவாய்

# நாயினூர் விதவையின் மகன்

(லூக்கா 7 : 11-17)

| | | |
|---|---|---|
| நம்பிக்கை | யிலா | விதவை |
| நாயீன் | எனு | மூரதிலே |
| பாலகன் | தான் | மரிக்க |
| பாடையிலே | தான் | கிடத்தி |
| நான்கு | பேர் | தோள்சுமக்க |
| நாலிரண்டு | கால் | நடக்க |
| ஊர்வலந் | தான் | ஊர்விட்டு |
| ஊர்ந்த | படி | தான்நடக்க |
| உற்றார்கள் | கூடி | ஒன்றாய் |
| ஒப்பாரி | பாடி | வர |
| மயானந் | தனை | நோக்கி |
| மந்தை | போல | போகையிலே |
| மற்றொரு | பாதை | தனில் |
| மரணத்தின் | கூர் | ஒடிக்கும் |
| மாசில்லா | மணி | இயேசு |
| மக்கள் | படை | சூழந்துவர |
| கலங்கும் | மாதை | கண்டு |
| கலங்காதே | என | உரைத்து |
| கைநீட்டி | பாடை | தொட |
| சுமந்தவர் | தம் | காலெட்டும் |
| சொன்னது | போல் | நின்றபோது |
| எழுவாய் | என | உரைக்க |
| எழுந்த | அவ் | வாலிபனை |
| இவளிடந் | தான் | விட்டுவிட்டு |
| ஏறுநடை | போட | புகழ் |
| எங்கும் | போய் | எட்டினதே |
| பாவத்தின் | பார | மதால் |
| பாழ்மரண | கூர் | துளைத்து |
| எழும்ப | வழி | இன்றி |
| என்ன | நான் | செய்வதென |
| ஏங்கித் | தான் | நிற்பவனே |

**ஏசுவைப்பார்**

**எழுப்பிடுவார் எழும்பிடுவாய்**

# கொன்னைவாய் செவிடு

## குணமாதல்

(மாற்கு 7 : 32-37)

வாயோ கொன்னை
வார்த்தைப் பிறழல்
காதும் செவிடு
கேட்டல் அரிது
கலிலேயா எனும்
கடற்கரை அருகே
வாழ்ந்து வந்த
ஒருவன் அவல
நிலமை இதுவே
கர்த்தர் இயேசு
வந்தா ரிங்கே
கண்டவ ரிவனை
கொண்டு நிறுத்தினர்
கரமதை வைத்தல்
வேண்டும் என்றே
எசுவை இவர்கள்
இறைஞ்சிக் கேட்க
இயேசுவு மிவனைத்
தனியே அழைத்து
ஒருகை விரலால்
காதைத் தொட்டு

மறுகை விரலால்
நாவைத் தொட்டு
கீழே துப்பி
மேலே பார்த்து
பெருமூச் சுடன்பே
ரிறைச்சல் போல
எப்பத்தா என
இயம்பின போது
எட்டுத் திக்கும்
இடியொலி போல
இறைச்சல் வந்து
இவன்மேல் மோத
கட்டுக ளறுந்து
காதும் கேட்க
பேசக் கேட்டவன்
பேசினான் கேட்க
காசினி தனிலே
இவர்போ லுண்டோ
என்றெல் லோரும்
வியந்து நின்றனர்

# எரிகோ குருடரின் கண்களை திறத்தல்

(மத்தேயு 9 : 27-31)

குருடர் இருவர் எரிகோ வழியில்
சந்தடி சத்தம் கேட்ட போதவர்
போதகர் அவ்வழி வருவ தறிந்து
கண்கள் ஒளியதை அடைய நினைத்து
உரத்த குரலில் ஒன்று சேர்ந்து
அழைத்த சப்தம் சீடர் அறிந்து
சத்தம் இடுதல் கூடா தென்றே
அதட்டி அடக்கி வைத்த போதிலும்
ஆண்டவா தாவீதின் குமரா எங்கள்
கண்கள் திறக்கக் கருணை காட்டும்
என்றவர் வார்த்தை கேட்ட இறைவன்
இறங்கி அழைத்து தொட்ட போதினில்
இருவர் கண்கள் பார்வை அடைந்து
இறைவன் வழியில் இனிதே சென்றார்
தட்டுக உமக்கு வாசல் திறவும்
கேட்டால் கேட்டதை தருவா ரவரும்
தேடினால் கண்ணால் காண்பா யெல்லாம்
கூப்பிடு உனக்கு உதவி செய்வார்

# அந்த நேரத்தில்தானே

(யோவான் 4 : 45-54)

கலிலேயாக் கடலோரம்
　　　　கானாவூர் என்னும்ஊர்
கர்த்தர்இயேசு தானுமங்கே
　　　　கடந்துவந்த போதினிலே
கப்பர் நகூமதிலே
　　　　காவலனின் வேலையாள்
கரம்குவித்து வேண்டுகிறான்
　　　　கர்த்தர்இயேசு முன்நின்று
என்மகனோ மரணத்தின்
　　　　மடிதனிலே துடிக்கின்றான்
நீர்வந்து என்மகனை
　　　　மீட்டுத்தர வேண்டுமென்றான்
அற்புதத்தை காணாமல்
　　　　ஆண்டவரை நம்பாய்நீ
அஞ்சாமல் செல்வாயுன்
　　　　ஆண்மகனும் பிழைத்துவிட்டான்
என்றவார்த்தை கேட்டவுடன்
　　　　ஏறுநடை போட்டுச்சென்றான்
என்னேஅவன் நம்பிக்கை
　　　　ஏசுசொன்ன வார்த்தையிலே!
எதிரில்வந்த வேலையாள்
　　　　ஏழாம்மணி வேளையிலே
எழுந்துவிட்டான் உன்மகனும்
　　　　ஏதும்பங்கம் இல்லையென்றான்
அந்தவார்த்தை கேட்டவுடன்
　　　　ஆனந்தம் கொண்டங்கே
அவன்வீட்டார் அனைவருமே
　　　　ஆண்டவரை அண்டினரே!
ஆண்டவரின் வார்த்தையைந்
　　　　அப்படியே நம்பிவிட்டால்
அற்புதங்கள் நடந்திடும்-உன்
　　　　ஆபத்துகள் நீங்கிவிடும்

# குஷ்டரோகி குணமாதல்

(மத்தேயு 8 : 2-4)

குஷ்ட்டமென்னும் கொடியநோய்
கொண்டொருவன்வந்துநின்று
குணமாக்க உம்மாலே
கூடுமென நானறிவேன்
சித்தப்படி என்னைநீர்
சுத்தமாக்கும் என்றுரைக்க
மனதுருக்கம் கொண்டவராய்
மாறாத வைத்தியனாய்
சித்தமுண்டு சுத்தமாகு
என்றுசொல்லி கைநீட்டி
கூசாமல் தொட்டவுடன்
குஷ்ட்டம்விட்டுப் போனதங்கே
காண்போர் அருவெறுக்கும்
கடும்நோய்நீ கொண்டவனாய்
கூட்டத்திலே நிற்பதற்கும்
கூச்சப்பட்டு தள்ளிநின்று
ஆறுதலாய் அரவணைக்க
அன்புடனே சொல்விளம்ப
யாருமில்லை என்றெண்ணி
அங்கலாய்த்து மாளாதே
அன்புடனே அரவணைக்க
ஆண்டவராம் இயேசுஉண்டு
அவரிடமே நீவந்தால்(புண்)
ஆறுதலைக் கண்டிடுவாய்.

# இயேசுவை சாத்தான் சோதித்தல்

(மத்தேயு 4 : 1-11)

நாளது வந்தபோது நல்மேய்ப்பர் இயேசுதாமே
ஞானஸ் நானம்பெற்று நற்சாட்சி தானும்பெற்று
நாற்பது உபவாச நாளது முடிந்தபோது
சோதனைக் காரனவன் சொன்னதுபோ லங்குவந்து
சோதிக்கத் தொடங்கினான் சொற்களைத் தானுதிர்த்தான்
தேவகுமாரன் நீரரிவேன் தேவைஅப்பம் உமக்கின்று
ஆணையிடும் கல்லுக்களை அப்பங்க ளாகட்டும்
ஆறட்டும் உம்பசியும் அதனால் இன்றென்ற
சாத்தானின் சத்தத்தை சத்தியம்தான் கேட்டபோது
அப்பத்தால் மட்டுமல்ல மனிதனிங்கு வாழுவது
வான்தந்தை வார்த்தையால் வாழ்வாங்கு வாழ்ந்திடுவான்
என்றுரைத்த ஏசுவையே இன்னுமவன் சோதிக்க
எழில்மிகு தேவாலய உயர்விடம் ஏற்றிவைத்து
உம்பாதம் கல்லதிலே இடறாமல் தன்கரத்தால்
எந்நாளும் ஏந்துதற்கு எவ்விடத்தும் தூதருண்டே
கீழ்நோக்கிக் குதியும்நீர் தேவகுமாரன் தானென்றால்
என்றுரைத்து ஏசுவையே பின்னுமவன் சோதித்தான்
பதிலதற்கு பாங்காக பரிசுத்தர் பகர்ந்திட்டார்
பரம பிதாவைநீ பரீட்சை பாராயென
பரிசுத்த வேதமது பகருவதைப் பாரென்றார்
பின்னும் பிசாசவரை மாமலையின் மேல்நிருத்தி
மாநிலத்து மகிமைதனை மாமன்னர் முன்காட்டி
மண்டியிட்டு என்னைநீ மனமுவந்து பணிந்திட்டால்
மண்ணிருக்கும் வரையில்நீ மன்னனாக ஆண்டிடலாம்
என்றுரைத்த சாத்தானை ஏறிட்டுப் பார்த்தஏசு
அலகைநீ அப்பாலே அகன்றுபோ என்றுனக்கு
ஆணையிட்டுச் சொல்லுகிறேன் ஆண்டவர் ஒருவரையே
அடிபணிய வேண்டுவது ஆகமத்தின் கூற்றென்றார்
அதுகேட்ட அலகையவன் அங்கிருந் தகன்றபோது
தூதர்கள் வந்தவர்க்குப் பணிவிடைகள் செய்தனரே!

# குருட்டூமை குணமாதல்

(மத்தேயு 12 : 22-23)

காண்பதற்கோ கண்ணில்லை
பேச்சுவர வாயுமில்லை
நீசன்தான் இவனென்று
நித்தமும்தான் தள்ளப்பட்டான்
காசினியில் தான்பிழைக்க
கண்டவழி ஒன்றுமில்லை
நேசிப்பார் யாரென்று
நித்தமும் கலங்கினவன்
நேசரிடம் வந்தபோது
பாசத்தை காட்டியவர்
பிசாசை துரத்தினபின்
பார்வையது திரும்பினது
நாவதையே அவனசைக்க
நல்வாக்கும் வந்திடவே
ஊமையவன் பேசிவிட்டான்
உடனிருந்தோர் அதிசயித்து
தாவீது என்பவரின்
குமாரன் தானிவரோ
என்றுபுகழ் பாடினராம்
கண்ணிருந்தும் ஒளியில்லை
வாயிருந்தும் வார்த்தையில்லை
வையகத்தில் வாழ்வதற்கு
வழியிங்கு ஏதுமில்லை
என்றேங்கும் மானிடனே
ஏசுவிடம் வந்திடுவாய்
ஒளிஅவரே வழிஅவரே
வார்த்தையவர் வாழ்வுமவர்
வந்திடுவாய் அவரண்டை
வாழ்வளிப்பார் வாழ்ந்திடுவாய்

# இயேசு கடல்மேல் நடந்தது

**(யோவான் 6 : 11-21)**

அக்கரைக்கு சீடர்களை அனுப்பிவிட்டு இயேசுமட்டும்
இக்கரையில் இருந்திட்டார் இரவெல்லாம் ஜெபிப்பதற்காய்
நான்காம் ஜாமமதில் நடுக்கடலில் எதிர்காற்றால்
அலையெழும்ப ஆண்டவரும் அமைதியாக நடந்துவர
அதைக்கண்ட சீடர்கள் ஆவிஎன்று அலறிவிட
பயம்வேண்டாம் திடன்கொள்க நடப்பதிங்கு நானென்றார்
இதைக்கேட்ட பேதுருவும் இதுஉண்மை என்றானால்
உம்மைப்போல் நான்நடந்து உம்மண்டை வரலாமா?
என்றுகேட்ட பேதுருவை என்னிடமாய் நடந்துவா
என்றழைத்த ஏசுவிடம் ஏகிடதன் தாள்பதித்தான்
ஏசுவையே பார்த்தபடி ஏறுநடை போட்டபோது
ஏதும்பங்க மில்லாமல் எடுத்தஅடி தாழாமல்
நேர்நடந்த பேதுருவின் பார்வையது மாறினதே
கர்த்தரையே பார்த்தகண் கடலலையைப் பார்த்தாலே
கலங்கியவன் காலிரண்டும் தண்ணீரில் தான்மூழ்க
தடுமாறிப் பேதுருவும் "ஆண்டவரே" என்றழைக்க
ஆண்டவரோ கரம்பிடித்து அஞ்சாதே ஏன்கொண்டாய்
அற்பமான விசுவாசம் என்றுரைத்து படகேறி
அலையெல்லாம் அமைதியாகி கடல்கடந்து கரைசேர்ந்தார்.
ஆபத்தில்லை உன்வாழ்வில் ஆண்டவரைப் பார்த்துவந்தால்
ஆழ்கடலில் மூழ்கிடுவாய் அடுத்தவரைப் பார்த்துநின்றால்.

# பத்து குஷ்டரோகிகள் குணமடைதல்

(லூக்கா 17 : 11-19)

| | | |
|---|---|---|
| எருசலேமை | நோக்கி | இயேசு |
| பயணம் | போன | போது |
| எதிர்பட்ட | கிராமம் | ஒன்றில் |
| பத்துபேர்கள் | ஒன்று | கூடி |
| பரிகாரி | இயேசு | வண்டை |
| பரிகாரம் | தேடி | வந்து |
| தூரத்திலே | நின்றுக் | கொண்டு |
| ஐயனும்மை | அண்டி | வந்தோம் |
| குஷ்ட்டரோகம் | நீங்கி | நாங்கள் |
| குணமாக | நீர் | இரங்கும் |
| என்றுகேட்ட | ரோகி | யிடம் |
| ஆலயத்தின் | முன்னே | போய் |
| ஆசாரியனை | காண்க | என்றார் |
| அவ்விதமே | பத்து | பேரும் |
| போகையிலே | குஷ்ட்டம் | நீங்க |
| அதிலொருவன் | மட்டும் | வந்து |
| ஆண்டவரை | பணிந்து | கொண்டான் |
| சுத்தமான | பத்து | பேரில் |
| மற்றவர்கள் | எங்கே | என்று |
| ஏசுநாதர் | கேட்ட | போது |
| ஏதும்பதில் | கிட்ட | வில்லை |
| நன்றியுள்ள | இதயம் | தன்னை |
| நாளுமவர் | தேடு | கிறார் |
| நன்மைபல | நாம | டைந்து |
| நன்றியற்றுப் | போய் | விடாமல் |
| நாளுமவர் | பாத | மதில் |
| நன்றிபலி | செலுத் | துவமே. |

# ஏழு அப்பம் நாலாயிரம் பேர்க்கு

(மத்தேயு 15 : 32-39)

| | | |
|---|---|---|
| திரளாய் | ஜனங்கள் | திரண்டுகூடினர் |
| அருளாம் | அவரின் | வார்த்தைகேட்க |
| இவர்களைக் | கண்ட | தேவன்தாமே |
| சீடரை | அழைத்துச் | செப்பினவாக்கு |
| சோர்வார் | இவர்கள் | இல்லம்போமுன் |
| இவர்கள் | இங்கு | உண்டுசெல்ல |
| உம்மிடம் | எத்தனை | அப்பம்உளதோ? |
| என்றே | கேட்ட | ஏசுவைநோக்கி |
| ஏழப் | பத்துடன் | சிலமீன்உண்டு |
| இத்தனை | பேர்க்கது | எப்படிபோதும்? |
| என்றனர் | சீடர் | இயேசுவிடமே |
| நாலா | யிரம்பேர் | பந்தியிருக்க |
| ஏழப்பம் | தன் | கரமதிலேந்தி |
| ஆசீர் | வதித்து | அதையும்பிட்டு |
| கொடுங்க | ளிந்தக் | கூட்டத்திற்கு |
| என்றே | சீடர் | கையில்தந்தார் |
| பாங்காய் | பந்தியில் | இருந்தோரங்கே |
| திருப்தி | யடைய | தின்றுமுடித்து |
| மீந்த | அப்பம் | சேர்த்தபோது |
| ஏழு | கூடைகள் | நிறையக்கண்டார் |
| உன்னிடம் | என்ன | உள்ளதுஎன்று |
| எம்மான் | உன்னை | கேட்கும்போது |
| உள்ளதை | மறைத்தால் | ஒன்றுங்காணாய் |
| உள்ளதை | கொடுத்தால் | பலனைக்காண்பாய் |

# ஐந்தப்பம் ஐயாயிரம்பேர்க்கு

(மத்தேயு 14 : 13-21 ; மாற்கு 6 : 30-44)

| | | |
|---|---|---|
| ஐயாயிரம்பேர் | ஆண்கள் | மட்டும் |
| ஆண்டவரேசு | போதனை | கேட்டு |
| பொழுதுபோக | போஜன | மின்றி |
| போகும்வழியில் | சோறா | திருக்க |
| சீடர்வந்து | செப்பு | கின்றார் |
| போஜனமவர்க்கு | போடுதற் | கிங்கே |
| போதியபொருளோ | பணமோ | இல்லை |
| என்னசெய்தல் | ஏற்ற | தென்று |
| எஜமானேநீர் | இயம்பும் | என்று |
| இதனைக்கேட்ட | இயேசு | தாமும் |
| இருப்பதிங்கே | கொண்டு | வாரும் |
| இருத்திடுமவரை | ஐம்பது | நூறாய் |
| என்றுசொன்னதை | கேட்ட | சீடரும் |
| சிறுவன்ஒருவன் | கையில் | கண்ட |
| ஐந்தப்பத்தோ | டிரண்டு | மீனை |
| அன்பர்கரமதில் | கொண்டு | சேர்க்க |
| ஏறெடுத்ததனை | அப்பா | பிதாவே |
| ஆசீர்வதியும் | அத்தனை | பேர்க்கும் |
| என்றவர்பிட்டு | இவரிடம் | கொடுக்க |
| எடுத்துவிளம்பினர் | எல்லா | பேர்க்கும் |
| உண்டனர்தாமும் | உண்டி | நிறைய |
| உண்டதுபோக | மிஞ்சின | அப்பம் |
| நஞ்சாய்போமுன் | சேர்க்க | அதனை |
| என்றவர்வாக்கு | கேட்ட | சீடர் |
| பனிரெண்டுகூடை | பாங்காய்ச் | சேர்த்தார் |
| பசிக்குஉணவு | இல்லை | என்று |
| பரிதவிக்கும் | பாமர | மக்கள் |
| புசிக்கஎன்ன | செய்வோம் | என்று |
| புலம்பிநாளும் | கலங்குவ | தேனோ |
| தேவராஜியத் | தோடே | நீதியை |
| தேடிநின்றால் | தினமுன் | தேவை |
| கூடுதலாகக் | கிடைக்கு | மென்றே |
| செப்பிடும்வேத | வாக்கதை | கேளாய்! |

# காற்றையும் கடலையும்

# அதட்டுதல்

(மத்தேயு 8 : 23-27)

| | | | |
|---|---|---|---|
| கடலதில் | பயணம் | செய்ய | ஏசு |
| படகதில் | பாங்காய் | ஏறின | போது |
| களைப்பால் | கண்கள் | மூடின | வேளை |
| கடலதில் | சிற்றலை | மீதில் | தானே |
| பெருங்காற் | றொன்றது | வந்து | மோத |
| காற்றுடன் | கடலலை | ஒன்று | சேர |
| உயர்ந்த | மலைபோல் | அலையை | காண |
| சீஷர்கள் | அங்குப் | பதறி | கீழே |
| வந்தனர் | மனமது | நொந்து | போக |
| மடிந்தோம் | நாங்கள் | அலைக | ளாலே |
| என்றவர் | கதறல் | கேட்ட | ஏசு |
| எழுந்தார் | கடலொடு | காற்றை | கூவி |
| அதட்டிட | அலைகள் | அமைதி | காண |
| இரைச்சல் | எல்லாம் | நின்று | போக |
| ஆச்சர்ய | மடைந்த | சீடர் | தாமே |
| இயேசுவோடே | அக்கரை | சேர்ந் | தார் |

# 153 மீன்கள்
(யோவான் 21 : 1-11)

| | | | |
|---|---|---|---|
| மனிதனைப் | பிடிக்க | வாஎன் | பின்னே |
| என்றே | இயேசு | அழைத்த | போது |
| எல்லாம் | விட்டு | பின்னே | சென்ற |
| பேதுரு | வோடே | திதிமு | தோமா |
| என்போர் | கூடி | மீனைத் | தேடி |
| கடலில் | படகில் | பயணம் | செய்து |
| இரவெல் | லாமவர் | மீனைத் | தேடி |
| விடியற் | காலை | வெறுங் | கையோடு |
| திரும்பும் | வேளை | தேவ | குமாரன் |
| தின்ன | இங்கு | என்ன | உண்டு |
| என்றே | கேட்ட | கேள்விக் | கங்கே |
| ஒன்றும் | இல்லை | ஒருரா | முழுதும் |
| வலையை | வீணே | விரித்து | வைத்தோம் |
| பொழுதும் | விடியப் | போகிற | திப்போ |
| என்றே | இவர்கள் | சொன்ன | போது |
| வலது | பக்கம் | வலையை | வீசு |
| என்றே | இயேசு | சொன்னதை | கேட்டு |
| வலையை | போட்டு | இழுத்த | போது |
| திரளாய் | மீன்கள் | இருக்கக் | கண்டு |
| இருக்கும் | வலுவை | திரட்டி | வலையை |
| இழுத்து | கரைசேர்த் | தெண்ணின | போது |
| நூற்றைம் | பத்து | மூன்று | மீன்கள் |
| எண்ணி | எடுத்ததை | எண்ணி | மகிழ்ந்தார் |
| உந்தன் | திட்டம் | ஏதும் | வேண்டா |
| அதனால் | நட்டம் | நாளும் | சேரும் |
| அவர்தம் | வார்த்தைப் | படியே | செய்வாய் |
| அளவில் | லாசீர் | நாளும் | சேரும். |

# அத்திமரம் பட்டுப்போதல்

(மாற்கு 11 : 12-24)

| | | | |
|---|---|---|---|
| பசியா | யிருப்போர் | என்னிடம் | வாரும் |
| புசிக்க | அப்பம் | தருவேன் | என்றவர் |
| பசியுடன் | ஓர்நாள் | பயணம் | போகையில் |
| பார்த்த | மரமதில் | பழங்கள் | கண்டால் |
| பறித்து | புசிக்க | நினைத்து | அவரும் |
| பக்கம் | வந்து | பார்த்த | போததில் |
| பச்சை | இலைதான் | பரந்து | கிடக்க |
| பழமோ | ஒன்றும் | காணா | ததினால் |
| பட்டுப் | போவென | சபித்த | போதது |
| பட்டுப் | போனதை | மறுநாள் | கண்டு |
| பரமன் | சொன்னது | பலித்தது | இன்று |
| என்றே | சீடர் | சொன்னது | கேட்டு |
| எம்மான் | எடுத்து | இயம்பின | வாக்கு |
| எவனா | கிலுமிம் | மலையைப் | பார்த்து |
| எழுந்து | கடலில் | விழுந்து | போவென |
| கட்டளை | யிட்டால் | கடலில் | போய்விழும் |
| ஆனால் | அப்படிச் | சொல்லும் | போதில் |
| ஐயம் | இன்றிச் | சொல்லுதல் | வேண்டும் |
| அப்பொழு | தவர்தம் | சொல்போ | லாகும் |
| என்றே | சொன்னார் | நன்றே | சொன்னார். |

# குணசாலியான ஸ்திரீ

**(நீதிமொழிகள் 31 : 10-31)**

குணசாலிப் பெண்ணவளின்
குணநலங்கள் கேட்டிடுவீர்
முத்துக்களின் விலைக்கெல்லாம்
முந்தியவள் நின்றிடுவாள்
கணவனின் இதயமென்றால்
காலமெல்லா மவளைநம்பும்
சம்பத்தோ குறையாமல்
சமர்த்தாகக் காத்திடுவாள்
கரம்பிடித்த கணவருக்கு
கண்மூடும் நாள்வரையில்
நன்மையன்றி தீமையொன்றும்
நங்கையவள் செய்தரியாள்
உற்சாகமாய் தன்கரத்தால்
உழைத்திடுவாள் நித்தமவள்
ஆகாரந் தனையவனும்
தூரமதில் இருந்தாலும்
வியாபாரக் கப்பலைப்போல்
விரைந்தவளும் சேர்த்திடுவாள்
கதிரவனைக் காணுமுன்னே
கடுந்துயிலை விட்டெழுந்து
வீட்டார்பசி நீக்கியவள்
விருந்தோம்பல் தான்முடித்து
பணியாளர் மடிநிறைய
படியளப்பாள் பாவையவள்
வயல்வெளியை வாங்கிடுவாள்
வஞ்சியவள் அந்நிலத்தில்
வாஞ்சையுடன் நட்டிடுவாள்
வளரும்நல் திராட்சைதனை
பெலத்தால்தன் இடைக்கட்டி
பெலத்துடனே நின்றவளும்
வளைகரத்தால் வயல்வெளியில்
வருத்தமின்றி தானுழைப்பாள்

வியாபாரம் விரயமல்ல
விளக்கென்றும் அணைந்திடாது
கைவைப்பாள் ராட்டினத்தில்
கைவிரல்கள் கதிர்பிடிக்கும்
இரங்கிடுவாள் இரப்போர்க்கு
இறைத்திடுவாள் ஏழைக்கவள்
நல்லுடையை தான்தரிப்பாள்
நடுங்கிடாள் குளிருக்கவள்
தேசத்து மூப்பருடன்
நேசத்துக் குரியவனும்
நியாயஸ் தலமதிலே
நின்றிருக்கச் செய்திடுவாள்
வஸ்த்திரமோ அலங்காரம்
வருங்காலம் மனமகிழ்ச்சி
தயவுள்ள போதகத்தைத்
தான்சொல்ல வாய்திறப்பாள்
கண்கொண்டு நோக்கிடுவாள்
காரியங்கள் என்னவென்று
சுறுசுறுப்பாய் தானிருப்பாள்
சோம்பலவள் கண்டறியாள்
பிள்ளைகள் தானெழும்பி
புண்யவதி எனப்புகழ்வார்
பதியவனிப் பார்தலத்தில்
பார்த்ததில்லை உன்னைப்போல்
குணசாலிப் பெண்களிக்
குவலயத்தில் மெத்தஉண்டு
குன்றெனநீ உயர்ந்தாயக்
குணசாலிகளுக் குள்ளென்பான்
கர்த்தருக்கு பயப்படுதல்
கருத்திலவள் கொண்டதினால்
காரிகையிப் புகழாரம்
கண்டடைந்தாள் கண்டிடுவாய்

# அணிந்துரை

அன்பின் குரல் ஊழியங்களின் ஸ்தாபகர், போதகர். அனீபா அவர்கள் ஆண்டவர் இயேசுவுக்குப் புகழாரம் சூட்டிப் புனைந்திருக்கும் கவிதைத் தொகுப்புகள் கண்டேன், உண்டேன், களித்தேன். புதிய முயற்சியில் சிறுக நுழைந்திருக்கும் அனீபாவின் இலக்கியப் பணிக்கு இது ஒரு இனிதான சான்று. கவிதைகள் பல உண்டு. இதிலே தனிச் சிறப்புண்டு என நான் கூறுவதை நீங்கள் மறுக்க இயலாது; இதை படித்து உணர்ந்ததால், அணிந்துரை எழுதுவதற்காக அகமகிழ்கிறேன். அவரது பாணியில் சிந்தனைத் துணிகளுடன் சிறுகவிதை புனைந்து, சிறக்கட்டும். அனீபாவின் கவிதைகள் என வாழ்த்துகிறேன்.

தெள்ளிய நீரில் துள்ளித்திரியும்
வெள்ளி மீன்களைப் போல் என்
உள்ளத்திரையில் மெத்தப் பதிந்ததிக்
கவிதைகள் நாற்பதும்.
பள்ளிப் பருவத்தில் அள்ளிப் பருகியதமிழ்
பொதிகைத் தென்றலாய் பூமணம் வீசி
உள்ளத்திரையை ஊடுருவிக் கொண்டது.
தெள்ளத் தேனமுதாய்
அனீபாவின் அடுக்குக் கவிதைகள்
துடுக்குத் தனமாய் மிடுக்குடன் ஒளிர்ந்து
இடுக்கண் களைந்து அகக்கண் திறக்கும்.
அனீபாவின் சாட்சி - அதில்
தெரிவதுநம் இயேசுவின் காட்சி
இதை படித்தால் வருவது மகிழ்ச்சி.
இறைவன் மாட்சி எடுத்துரைத்து
குறைவிலா குணவதியின் குணநலன் கூறி தன்னைக்
குன்றுமணி அளவாய் குறைத்து முடிததால்
குணக்குன்றாய் மலர்கின்றார் அனீபா.

அன்புடன்
இயேசுவின் பணியாளன்
பாஸ்டர். ஜான் F. காலேப்
தமிழ்நாடு பூரண சுவிசேஷ சபை
அமைந்தகரை,
சென்னை.

# PRAY FOR OUR MINISTRIES

## CHURCH MINISTRY

DIVINE CHRISTIAN ASSEMBLY
Davidson School,
No. 7, V.P. Cololny, Ayanavaram, Chennai - 600 023.
(Sunday Morning Service - 8.30 a.m.)

DIVINE CHRISTIAN ASSEMBLY
No. 13, Duraisamy Street, Opposite Kumaran Theatre,
Kolathur, Chennai - 600 099.
(Sunday Morning Service - 7.00 a.m.)

## TEACHING MINISTRIES

Teaching in Bible Schools
Teaching for Lay preachers in Churchus
(To share the gospal among Muslims)

## PREACHING MINISTRIES

Preaching the Gospel
(Anbinkural Good News Meetings)

## BIBLE SCHOOL

Training the students to do the Gospel
work among Muslims.

## CHILDREN'S HOME

Taking care of the poor & Orphan children
(House of Love)